# பரிசுத்த பவுல் ஆலயம், குவைத்

# அஹமதி தமிழ் திருச்சபை



# நாளைக்காகக் கவலைப்படாதிருங்கள்


மத்-6:34

செய்தி மலர்
2020
பிப்ரவரி

இதழ் : 10
மலர் : 16



# சபை ஊழியரின் அன்பு மடல்



## நாளைக்காக கவலைப்படாதிருங்கள்

கிறிஸ்துவிற்குள் அன்பான திருச்சபை குடும்பத்தாரே எல்லாம் வல்ல இறைவன் இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் எல்லோரும் நலமாக இருப்பீர்கள் என்று விசுவாசிக்கிறேன். என்னுடைய ஆவலும் அனுதின ஜெபமும் அதுவே.

கடந்த ஜனவரி மாதம் முழுவதும் கண்மணி போல பாதுகாத்த தேவன் வரும் பிப்ரவரி மாதத்திலும் புதிய ஆசீர்வாதங்களையும், புதிய நன்மைகளையும் புதிய கிருபைகளையும் தந்து நம் சபையை வழி நடத்துவாராக.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து கூறினார் "நாளைக்காக கவலைப்படாதிருங்கள்" (மத்-6:34) என்று.

எதிர்கால கவலை அதிகமாய் நம்மை வாட்டி வதைக்கிறது. நம் வேலை என்ன ஆகுமோ? என் பிள்ளைகள் வாழ்வு எப்படி இருக்குமோ? என்னுடைய தேவைகள் எப்படி சந்திக்கப்படுமோ? என்றெல்லாம் பல்வேறு விதமான குழப்பங்கள் உள்ளத்தில் தோன்றி நம் உள்ள சமாதானத்தை மிகவும் பாதிக்கிறது. ஆனால் இயேசு நம்மை பார்த்து சொல்கிறார். நாளைக்காக கவலைப்படாதிருங்கள் என்று. காரணம் அவர் கூறினார் " வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. " இதோ உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன்" என்று (மத்-28:18,20)

வேதாகமத்தில் தேவ மனிதர்கள் வருங்கால கவலைகளை எப்படி மேற்கொண்டார்கள் என்று கீழ் வரும் பகுதிகளில் விளக்கமாக காணலாம்.

### 1. சாறிபாத் விதவையைப்போல.........

தேவன் இஸ்ரவேல் ராஜாவாகிய ஆகாபுக்கு விரோதமாக கொடுத்த சாபத்தின்படி மழை பெய்யாதபடிக்கு வானம் அடைக்கப்பட்டிருந்தது. தேசமெங்கும் தண்ணீர் பஞ்சம் தலைவிரித்தாடியது. தேவ மனிதனாகிய எலியா சாறிபாத்தின் ஒலிமுக வாசலுக்கு வந்தபோது விறகு பொறுக்கிக்கொண்டிருந்த ஒரு ஏழை விதவையைப் பார்த்து தண்ணீரும் அப்பமும் கேட்டான்.

3 அப்பொழுது "அந்த பெண் பானையில் ஒருபிடி மாவும் கலயத்தில் கொஞ்சம் எண்ணெயுமே அல்லாமல் என்னிடத்தில் ஒரு அடையும் இல்லையென்று சொல்லி நானும் என் குமாரனும் சாப்பிட்டு செத்து போகவே விறகு பொறுக்க வந்திருக்கிறேன் என்று பதிலுரைத்தாள்.

அப்பொழுது எலியா முதலில் ஒரு சிறு அடையைப் பண்ணி என்னிடத்தில் கொண்டு வா. பின்பு உனக்கும் உன் குமாரனுக்கும் பண்ணலாம். கர்த்தர் சொல்கிறார். தேசத்தின் மேல் மழை பெய்யும் மட்டும் பானையின் மா செலவழிந்து போவதுமில்லை. கலசத்தில் எண்ணெய் குறைந்து போவதுமில்லை" என்று. (1-ராஜா-17:1-24)

இதை அப்படியே விசுவாசித்து ஏற்றுக்கொண்ட சாறிபாத் விதவை அப்படியே செய்தாள். என்ன ஆச்சரியம்? அவளும் எலியாவும் அவள் வீட்டாரும் அநேக நாள் சாப்பிட்டார்கள். பானையிலே மா செலவழிந்து போகவும் இல்லை. கலசத்தில் எண்ணெய் குறைந்து போகவுமில்லை. அல்லேலூயா. அதுமட்டுமல்ல அந்த விதவையின் ஒரே மகன் திடீரென்று மரித்துப் போனான். ஆனால் எலியா ஜெபித்த போது மீண்டும்.உயிர் பிழைத்தான். இரட்டிப்பான ஆசீர்வாதங்களை சாறிபாத் விதவை பெற்றுக்கொண்டாள்.

சாறிபாத் விதவையினுடைய எதிர் கால கவலை மறைந்து போனதற்கு ஒரே அடிப்படை காரணம் தேவ வார்த்தையை விசுவாசித்தாள். தேவனுடைய அற்புதத்தை எதிர் நோக்கி ஜெபித்தாள்.

தேவ மனிதனுடைய வார்த்தையை விசுவாசித்து தனக்கு இல்லாவிட்டாலும் தேவ மனிதனை போஷிக்க வேண்டுமென்று தீர்மானித்தாள்.

என் அன்பு சகோதர சகோதரிகளே, தேவன் நம்மை ஒருநாளும் கைவிட மாட்டார். அவருடைய வசனங்களை விசுவாசியுங்கள். அற்புதங்களை எதிர்பாருங்கள். கர்த்தர் பெரிய காரியங்களை செய்வார். உங்கள் எதிர்கால தேவைகளை கர்த்தர் பொறுப்பெடுத்துக்கொள்வார்.

நம்பிக்கையிலே சந்தோஷமாயிருங்கள், உபத்திரவத்திலே பொறுமையாயிருங்கள், ஜெபத்திலே உறுதியாய் தரித்திருங்கள் (ரோம-12:12)

## 2. ஒரு துட்டு காணிக்கை போட்ட விதவை......

ஒரு நாள் இயேசு காணிக்கை பெட்டிக்கு எதிராக உட்கார்ந்து ஜனங்கள் காணிக்கை பெட்டியில் பணம் போடுகிறதை பார்த்துக்கொண்டிருந்தார். ஐசுவரியவான்கள் அநேகர் அதிகமாய் போட்டார்கள். அந்த சமயத்தில் ஒரு ஏழை விதவை வந்து ஒரு துட்டுக்கு சரியான இரண்டு காசை போட்டாள். (மாற்கு-12:41-44) அவளிடம் இருந்ததே அந்த இரண்டு காசுதான் அடுத்த வேளை உணவுக்கு அவளிடம் காசு இல்லை. அவள் பட்டினியாகத்தான் இருக்க வேண்டும். அந்த இரண்டு காசை வைத்து ஏதாவது வாங்கி உண்டு தன் பசியை ஆற்றி இருக்க முடியும் ஆனால் அவளோ எதைப்பற்றியும் கவலைப்படாமல் எதிர்காலத்தை குறித்து கொஞ்சமும் கலங்காமல் முதலாவது தேவனுக்கு காணிக்கை கொடுக்க வேண்டும் என்று ஆசைப்பட்டாள்.

உள்ளத்தின் எண்ணங்களை அறிந்த இயேசு கிறிஸ்து தம்முடைய சீஷரை அழைத்து காணிக்கை பெட்டியில் பணம் போட்ட மற்ற எல்லாரைப் பார்க்கிலும் இந்த ஏழை விதவை அதிகமாய் போட்டாள் என்று மெய்யாகவே உங்களுக்கு சொல்லுகிறேன். ஆம் இயேசு கிறிஸ்துவையே இந்த ஏழை விதவை ஒரு கணம் அசைத்து விட்டாள். தன்னுடைய எதிர்காலத்தை குறித்து கொஞ்சமும் அஞ்சாத அவள்

நெஞ்சின் துணிவை இயேசு பாராட்டினார். அவர்கள் எல்லாரும் தங்கள் பரிபூரணத்திலிருந்து எடுத்துப் போட்டார்கள். இவளோ தன் வறுமையிலிருந்து தன் ஜீவனத்துக்கு உண்டாயிருந்த எல்லாம் போட்டு விட்டாள் என்றார். ஆம் பிரியமாணவர்களே, "முதலாவது தேவனுடைய இராஜ்ஜியத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள் அப்பொழுது இவைகள் எல்லாம் உங்களுக்கு கூட கொடுக்கப்படும்" (மத்-6:33)என்ற வசனத்தை இந்த ஏழை விதவை கடைபிடித்தாள். தன்னுடைய எதிர்காலம் என்னவாகுமோ என்று கொஞ்சமும் கவலைப்படவில்லை. எப்படியும் கடவுள் தன் தேவைகளை பார்த்துக்கொள்வார் என்று அவள் விசவாசித்தாள்.

உதாரகுணமுள்ள ஆத்துமா செழிக்கும் (நீதி-11:25 ) உற்சாகமாய் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்.(2-கொரி-9:7)அவன் கொடுத்ததை கர்த்தர் திரும்பக்கொடுப்பார் (நீதி-19:17) என்ற வசனங்களையெல்லாம் செய்தி வேளையில் ஆலயத்தில் கேட்டு அவைகளை விசுவாசித்தாள். அதனால் இயேசு கிறிஸ்துவின் பாராட்டை அவள் பெற்றுக்கொண்டாள். அவள் அநேக நாட்களாக தன் வறுமையிலும் உதாரத்துவமாய் ஆண்டவருக்கு காணிக்கை கொடுத்திருக்க வேண்டும். யார் பார்க்கிறார்களோ? அல்லது பார்க்க வில்லையோ? என்பதை பற்றி அவள் கொஞ்சமும் கவலைப்படவுமில்லை அதை எதிர்பார்க்கவும் இல்லை.

ஆனால் பாருங்கள் அது இயேசுவின் கண்களில் ஒரு நாள் பட்டுவிட்டது அல்லேலூயா. நாமும் எதிர்காலத்தை குறித்து கொஞ்சமும் கவலைப்படாமல் ஆண்டவருக்கு கொடுக்க வேண்டிய காணிக்கையை தாலந்தை நேரத்தை வசதியை வாய்ப்பை தவறாமல் கொடுக்க நாம் முன்வரவேண்டும். அப்பொழுது கர்த்தர் உங்கள் எதிர்காலத்தை ஆசீர்வதிப்பார்.

## 3.பவுலைப் போல......

ஒரு நாள் அகபு என்னும் பேர் கொண்ட தீர்க்கதரிசி யூதேயாவிலிருந்து வந்து பவுலினுடைய கச்சையை எடுத்து தன் கைகளையும் கால்களையும் கட்டிக்கொண்டு இந்த கச்சையுடையவனை எருசேலமிலுள்ள யூதர் இவ்விதமாய் கட்டி புறஜாதியார் கைகளில் ஒப்புக்கொடுப்பார்கள் என்று பரிசுத்த ஆவியானவர் சொல்லுகிறார் என்றான் இவைகளை கேட்ட விசுவாசிகள் மிகவும் அழுது பவுல் எருசலேமுக்கு போககூடாது என்று மிகவும் அழுதார்கள். அதற்கு பவுல் நீங்கள் அழுது என் இருதயத்தை ஏன் உடைந்து போக பண்ணுகிறீர்கள். எருசலேமில் நான் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்திற்காக கட்டப்படுவதற்கு மாத்திரமல்லை, மரிப்பதற்கும் ஆயத்தமாயிருக்கிறேன் என்றான். (அப்-21:10-13) அல்லேலூயா.

பவுல் தன் எதிர்காலத்தை குறித்து கொஞ்சமும் கவலைப்பட வில்லை. எந்த தெய்வத்திடமிருந்து தரிசனத்தையும் அழைப்பையும் பெற்றுக்கொண்டானோ? அந்த தெய்வத்திற்காக தன் எதிர்காலமே அழிவதையோ? மரித்துப்போவதையோ குறித்து கொஞ்சமும் கவலைப்படவில்லை. சுவிசேஷத்தை நான் பிரசங்கித்து வந்தும் மேன்மை பாராட்ட எனக்கு இடமில்லை. அது என் மேல் விழுந்த கடமையாயிருக்கிறது. சுவிசேஷத்தை நான் பிரசங்கியாதிருந்தால் எனக்கு ஐயோ? நான்

அடிமைப்படாதவனாயிருந்தும் நான் அதிக ஜனங்களை ஆதாயப்படுத்திக் கொள்ளும்படிக்கு என்னைத் தானே எல்லாருக்கும் அடிமையாக்கினேன். பலவீனரை ஆதாயப்படுத்திக்–கொள்ளும்படிக்கு பலவீனருக்கு பலவீனனைப் போலானேன், எப்படியாகிலும் சிலரை இரட்சிக்கும்படிக்கு நான் எல்லாருக்கும் எல்லாமானேன். ஆதலால் நான் நிச்சயமில்லாதவனாக ஓடேன் ஆகாயத்தை அடிக்கிறவனாக சிலம்பம் பண்ணேன். மற்றவர்களுக்கு பிரசங்கம் பண்ணுகிற நான்தானே ஆகாதவனாய் போகதபடிக்ககு என் சரீரத்தை ஒடுக்கி கீழ்படுத்துகிறேன். (1–கொரி–9:16–27)என்று கூளுரைத்தார்.

என் அன்பு சகோதர சகோதரிகளே, பவுலுக்கு எதிர்காலத்தை குறித்த ஒரு நம்பிக்கை இருந்தது. பவுல் மிகச்சிறந்த படிப்பாளி, வசதி வாய்ந்தவர், அரசியல் செல்வாக்கு மிக்கவர், ஒரு தொழிளதிபர், மதப்பற்று மிக்கவர் ஆனாலும் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவுக்காக தனக்கு இலபமாய் காணப்பட்ட எல்லாவற்றையும் நஷ்டமும் குப்பையுமாக எண்ணினார். (பிலிப்–3:7,11)தன் உயிரையே துச்சமாக எண்ணினார் எவ்வளவோ பாடுகளை ஆண்டவருக்காக சகித்தார் தன்னுடைய வசதி வாய்ப்புகள் எல்லாவற்றையும் துறந்தார். எந்த நிலைமையிலிருந்தாலும் மனரம்மியமாய் இருக்க கற்றுக்கொண்டார். இதற்கெல்லாம் அடிப்படைக் காரணம் என்னவென்றால் "என்னை பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்கு பெலனுண்டு" எனக்கூறினார். (பிலிப்–4:13)

ஆம் பிரியமாணவர்களே முக்காலங்களையும் உணர்ந்த இயேசுகிறிஸ்து எதிர்காலத்தை நாம் ஜெயத்தோடு எதிர்கொள்ள பவுலுக்கு கொடுத்த பெலனை நமக்கும் தருவார். ஆகவே எதிர்காலத்தை குறித்து கொஞ்சமும் கலங்க வேண்டாம். விசுவாசத்தோடும்,நம்பிக்கையோடும்,தேவ பலத்தோடும் எதிர்காலத்தை வெற்றிக்கொள்வோம்.

கர்த்தர் தாமே உங்கள் ஒவ்வொருவரோடும் கூடஇருந்து எதிர் கால கவலைகளையும், பயங்களைகும் கலக்கங்களையும் நீக்கி விசுவாசத்தையும், நம்பிக்கையும் தைரியத்தையும் கொடுத்து உங்களை ஆசீர்வதிப்பாராக. இதற்காகவே பரிசுத்த ஆவியை நமக்கு கர்த்தர் கொடுத்திருக்கிறார். அவர் உங்களை சகல சத்தியத்திற்குள்ளும் வழி நடத்துவார். (யோவா–16:13) நான் உங்களை திக்கற்றவர்களாக விடேன் உங்களிடத்தில் வருவேன். உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள். திகிலுக்கு தூரமாவாய் அது உங்களை அணுகுவதில்லை. (ஏசா–54:14)

கர்த்தர் தாமே உங்கள் ஒவ்வொருவரையும் ஆசீர்வதித்து அற்புத அடையாளங்களோடு கூட புதிய காரியங்களை செய்து வழி நடத்துவாராக.

கர்த்தரின் பணியில்,

சபையின் ஊழியர் அன்பு சகோதரர்

**S.ஸ்டாலின்**

# வைராக்கியம் கொண்ட தேவ மனிதர்கள்

கர்த்தராகிய இயேசுகிருஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழத்துக்கள்! இந்த மாத செய்திமலர் மூலமாக தேவனுடைய வார்த்தயை தங்களுக்கு பகிர்ந்தளிக்க செய்த தேவனுக்கு நன்றி இந்த செய்தியின் மூலம் தங்களுடன் தொடர்பு கொள்வதில் கர்த்துருக்குள் மகிழச்சி அடைகிறேன் கர்த்தர்தாமே உங்களனைவரையும் ஆசீர்வதிப்பாராக!

செய்திக்கு ஆதாரமாக கூட ஒரு வசனத்தை எடுத்து கொள்வோம் "நான் என் எரிச்சலில் இஸ்ரவேல் புத்திரரை நிர்மூலமாக்காதபடிக்கு, ஆசாரியனாகிய ஆரோனின் குமாரனான எலெயாசாரின் மகன் பினெகாஸ், என் நிமித்தம் அவர்கள் நடுவில் பக்திவைராக்கியம் காண்பித்ததினால், இஸ்ரவேல் புத்திரர்மேல் உண்டான என் உக்கிரத்தைத் திருப்பினான்." எண்ணாகமம் 25:11

கிருஸ்துவுக்குள் மிகவும் பிரியமான தேவ ஜனமே! நாம் ஒரு மூன்று காரியங்களை மனதில் கொள்ள வேண்டும்

1.இன்றைக்கு நமது வைராக்கியம் எப்படிபட்டதாய் இருக்கின்றது என்பது

2.சிலர் அநீதிக்காக வைராக்கியம் கொள்கிறார்கள், ஆனால் நம்முடைய வைராக்கியமோ நீதிக்காக இருக்க வேண்டும்.

3.எல்லாவற்றையும் விட நாம் தேவனுக்காக பக்தி வைராக்கியம் கொண்டவர்களாய் இருக்க வேண்டும்.

## நீதிக்காக வைராக்கியம் கொள்வது:-

நல்ல விஷயத்தில் வைராக்கியம் பாராட்டுவது நல்லதுதான்; அதை நான் உங்களிடத்தில் இருக்கும் பொழுது மாத்திரமல்ல, எப்பொழுதும் பாராட்டவேண்டும்.( கலாத்தியர் 4:18)

நல்ல விஷயம் என்றால் என்ன? நீதிக்காக வைராக்கியமாய் இருப்பது.

கர்த்தர் நீதியுள்ளவர், நீதியின்மேல் பிரியப்படுவார்; அவருடைய முகம் செம்மையானவனை நோக்கியிருக்கிறது.(சங்கீதம் 11:7)

நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் திருப்தியடைவார்கள். (மத்தேயு 5:6) உதாரணம் லஞ்சம், பொய் சாட்சி,

## அநீதிக்காக வைராக்கியமாய் இருப்பது:-

கெட்டுப்போகிறவர்களுக்குள்ளே அநீதியினால் உண்டாகும் சகலவித வஞ்சகத்தோடும் இருக்கும். இரட்சிக்கப்படத்தக்கதாய்ச் சத்தியத்தின்மேலுள்ள அன்பை அவர்கள் அங்கிகரியாமற்போனபடியால் அப்படி நடக்கும(2 தெசலோ 2:10)

அந்நிய நுகத்திலே அவிசுவாசிகளுடன் பிணைக்கப்படாதிருப்பீர்களாக; நீதிக்கும் அநீதிக்கும் சம்பந்தமேது? ஒளிக்கும் இருளுக்கும் ஐக்கியமேது? (2 கொரி 6:14)

அநீதி என்பது தேவனுக்கு விரோதமான காரியம் அதனால் அநீதிக்காக நாம் வைராக்கியமாய் இருக்க கூடாது.

## தேவன் மேல் கொள்ளும் பக்தி வைராக்கியம் :-

உம்முடைய வீட்டைக்குறித்து உண்டான பக்திவைராக்கியம் என்னைப் பட்சித்தது; உம்மை நிந்திக்கிறவர்களுடைய நிந்தனைகள் என்மேல் விழுந்தது.(சங்கீதம் 69:9)

என் சத்துருக்கள் உம்முடைய வசனங்களை மறந்தபடியால், என் பத்திவைராக்கியம் என்னைப் பட்சிக்கிறது.( சங்கீதம் 119:139)

தாவீது கர்த்தர் மேல் கொண்ட பக்தி வைரா்கியத்தை இப்படியாய் வெளிபடுத்துகிறார்.

## சாத்ராக் மேஷாக், ஆபேத்நேகோ.:-

நேபுகாத்நேச்சார் அவர்களை நோக்கி: சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்களே, நீங்கள் என் தேவர்களுக்கு ஆராதனைசெய்யாமலும் நான் நிறுத்தின பொற்சிலையைப் பணிந்துகொள்ளாமலும் இருந்தது மெய்தானா ?(தானியேல் 3:14)

அவர் கர்த்தர் மேல் கொண்ட பக்தி வைராக்கியத்தால் அவர்கள் சொன்ன பதில் . சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்கள் ராஜாவை நோக்கி: நேபுகாத்நேச்சாரே, இந்தக் காரியத்தைக் குறித்து உமக்கு உத்தரவு சொல்ல எங்களுக்கு அவசியமில்லை.(தானியேல் 3:16) என்று தொடா்ந்து அவாகள் சொன்ன காரியம் "நாங்கள் ஆராதிக்கிற எங்கள் தேவன் எங்களைத் தப்புவிக்க வல்லவராயிருக்கிறார்; அவர் எரிகிற அக்கினிச்சூளைக்கும், ராஜாவாகிய உம்முடைய கைக்கும் நீங்கலாக்கி விடுவிப்பார்.

18. விடுவிக்காமற்போனாலும், நாங்கள் உம்முடைய தேவர்களுக்கு ஆராதனை செய்வதுமில்லை, நீர் நிறுத்தின பொற்சிலையைப் பணிந்துகொள்வதுமில்லை என்கிறது ராஜாவாகிய உமக்குத் தெரிந்திருக்கக்கடவது என்றார்கள். (தானியேல் 3:17,18)

சிறிதளவேனும் பதில் இல்லாமல் பதட்டபடாமல் ராஜாவுக்கு பதில் கொடுத்தார்கள் இவர்களின் பக்தி வைராக்கிய்தினால் ராஜா கர்த்தரை ஏற்று கொண்டாண்.

அப்பொழுது எலியா ஜனங்களை நோக்கி: கர்த்தரின் தீர்க்கதரிசிகளில் மீந்திருக்கிறவன் நான் ஒருவன்; பாகாலின் தீர்க்கதரிசிகளோ நானூற்றைம்பதுபேர்.(1 இராஜா 18:22) 450 மொத்தம் 850 பேர்

இரண்டு காளைகளை கொண்டுவரட்டும். ஒன்றையும் அவர்கள் வைக்கட்டும், மற்றொன்று நான் வைக்கிறேன். பலிபீடத்தின் மேல்

நீங்கள் உங்கள் தேவனுடைய நாமத்தைச் சொல்லி கூப்பிடுங்கள்; நான் கர்த்தருடைய நாமத்தைச் சொல்லிக் கூப்பிடுவேன், அப்பொழுது அக்கினியினால் உத்தரவு அருளும் தெய்வமே தெய்வம் என்றான்; (1 இராஜா 18:24) மத்தியானவேளையிலே எலியா அவாகளைப் பரியாசம்பண்ணி: உரத்த சத்தமாய் கூப்பிடுங்கள்; அவன் தேவனாமே, அவன் தியானத்தில் இருப்பான்; அல்லது அலுவலாயிருப்பான்; அல்லது பிரயாணம்போயிருப்பான்; அல்லது தூங்கினாலும் தூங்குவான்; அவனை எழுப்பவேண்டியதாக்கும் என்றான்.; (1 இராஜா 18:27)

அந்திப்பலி செலுத்தும் நேரத்திலே, தீர்க்கதரிசியாகிய எலியா வந்து: ஆபிரகாமுக்கும் ஈசாக்குக்கும் யாக்கோபுக்கும் தேவனாகிய கர்த்தாவே, இஸ்ரவேலிலே நீர் தேவன் என்றும், நான் உம்முடைய ஊழியக்காரன் என்றும், நான் இந்தக் காரியங்களையெல்லாம் உம்முடைய

வார்த்தையின்படியே செய்தேன் என்றும் இன்றைக்கு விளங்கப்பண்ணும். 37. கர்த்தாவே, நீர் தேவனாகிய கர்த்தர் என்றும், தேவரீர் தங்கள் இருதயத்தை மறுபடியும் திருப்பினீர் என்றும் இந்த ஜனங்கள் அறியும்படிக்கு, என்னைக் கேட்டருளும், என்னைக் கேட்டருளும் என்றான். (I இராஜா 18:36,37)

38. அப்பொழுது: கர்த்தரிடத்தில் இருந்து அக்கினி இறங்கி, அந்தச் சர்வாங்க தகனபலியையும், விறகுகளையும், கற்களையும், மண்ணையும் பட்சித்து, வாய்க்காலிலிருந்த தண்ணீரையும் நக்கிப்போட்டது. (I இராஜா 18:38)

பெரிய ஜனக்கூட்டதிற்கு நடுவே எலியா கர்த்தர் மேல் கொண்ட பக்தி வைராக்கியமாய் நின்றார்.அவரடைய பக்தி வைரர்கியத்தினால் அநேகர் கர்த்தரை தெய்வமாய் ஏற்று கொண்டார்கள்.

.விசுவாசத்தினாலே உங்களைக் குறித்து ஆறுதலடைந்தோம்.( I தெச 3:7)

<u>அநேகநாள் அவர்கள் போஜனம் பண்ணாம் இருந்தபோது</u>, பவுல் அவர்கள் நடுவிலே நின்று: மனுஷரே, இந்த வருத்தமும் சேதமும் வராதபடிக்கு என் சொல்லைக்கேட்டு, கிரேத்தாதீவை விட்டுப்புறப்படாமல் இருக்கவேண்டியதாயிருந்தது.(அப்போ 27:21)

எத்தனை போராட்டங்கள் , நிந்தணைகள், எதிரயம் ப்புகள்,பரியாசங்கள்,பசி , நிர்வாணம், எதிர்ப்புகள், பரியாசங்கள்,பசி , நிர்வாணம், மரணத்திற்கு, ஏதுவான காரியங்கள், பவுலின் , வாழ்க்கையில், வந்தது, ஆனாலும். அவர் கிறிதுவின் மேல் கொண்டு பக்தி வைராக்கியம், இவ வைல்லாவற்றிலும், இருந்து, பாதுகாத்தது,

36. கிறிஸ்துவின் அன்பைவிட்டு நம்மைப் பிரிப்பவன் யார்? உபத்திரவமோ, வியாகுலமோ, துன்பமோ, பசியோ, நிர்வாணமோ, நாசமோசமோ, பட்டயமோ? ( ரோமர் 8:36)

பவுல் கடைசியாக சொல்கிறார்.

நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன்.( 2 தீமத்தேயு 4:7)

கடைசியாக இப்படி நாமும் கர்த்தருக்காக பக்தி வைராக்கியமாக வாழ வேண்டும் அப்படி வாழ்ந்தால் நம் மூலமாய் அனேகர் மனந்திரும்பி இரடசிக்கபடுவார்கள்.

பக்தி வைராக்கியமாக இருப்பவர்களுக்கு கர்த்தர் கொடுக்கும் வாக்குதத்தம் "ஆகையால், இதோ, அவனுக்கு என் சமாதானத்தின் உடன்படிக்கையைக் கட்டளையிடுகிறேன்." ( எண்ணாகமம் 25:12)

அவன் தன் தேவனுக்காக பக்திவைராக்கியம் காண்பித்து, இஸ்ரவேல் புத்திரருக்காகப் பாவநிவிர்த்தி செய்தபடியினால், அவனுக்கும் அவனுக்குப் பின்பு அவன் சந்ததிக்கும் நித்திய ஆசாரிய பட்டத்திற்குரிய உடன்படிக்கை உண்டாயிருக்கும் என்று சொல் என்றார். ( எண்ணாகமம் 25:13)

கர்த்தர்தாமே இந்த வசனங்களை ஆசீர்வதிப்பாராக! ஆமென்!

கிறிஸ்துவுக்குள் அன்பு சகோதரன்

*Prasad Sundaram*

# 2020 ஜனவரி மாத வேத வினாவுக்கு

| | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 சி | ரு | ஷ் | டி | த் | 2 தா | ர் | | | ல் | கே | க் | தெ | 3 இ | | 4 உ |
| றி | | | | | யா | | 5 உ | டை | க | ள் | | | | | ன் |
| ய | ம் | | 6 வெ | | ன | ம் | | | க் | | | | | 7 ந | |
| 8 சு | ட | ரொ | ளி | | 9 வ | ரு | ஷ | ங் | க | ளை | | ர் | னா | தி | 10 ஊ |
| ட | ட் | | ச் | | ள் | த | | | த | | 11 ஆ | தா | ம் | | ரு |
| ர் | 12 | | ச | | | தை | | | மே | | சை | த் | | | ம் |
| | | | ம் | யு | ளை | 13 வி | | ன் | 14 கோ | 15 கீ | | 16 வை | ர் | 17 வே | |

**மேலிருந்து கீழ்**

1. ஆதி 1:16
2. ஆதி 3:20
4. ஆதி 3:15
6. ஆதி 1:5
7. ஆதி 2:10
10. ஆதி 1:25-31
11. ஆதி 3:16

**கீழிருந்து மேல்**

12. ஆதி 2:8/15
13. ஆதி 1:29
14. ஆதி 2:12
16. ஆதி 2:8

**வலமிருந்து இடம்**

1. ஆதி 1:1
5. ஆதி 3:21
8. ஆதி 3:24
9. ஆதி 1:14
11. ஆதி 3:8

**இடமிருந்து வலம்**

3. ஆதி 2:14
10. ஆதி 2:7
13. ஆதி 2:11
15. ஆதி 2:13
17. ஆதி 3:19

## 2020 ஜனவரி மாத வேத வினாவுக்கு பதில் எழுதியவர்கள்

Sis. சுகந்தி தம்பு குமார்
Sis. நகோமி ஜான்சன்
Sis. மெர்சிலின் தயா இயேசு ரெத்தினம்
Sis. சாந்தி
Sis. செலின் டேவிட்
Sis. பத்மினி வர்கீஸ்
Sis. லதா கிருஸ்டோபர்
Sis. ஜீனா சதீஷ்குமார்
Sis. ஜீவி பாக்கியவதி வேதானந்தம்

"நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப்படுத்துவேன்; ... " (ஆதி – 12:2)

## இந்த மாதம் பிறந்த நாளை சிறப்பிக்கிறவர்கள்

செல்வி. ஜியோஃபி ஷம்மா ஏசுரெத்தினம்

சகோதரி. ராணி ராமமூர்த்தி

சகோ. எபிநேசர் .V

செல்வி. ஷாரோன் கிரேஸ் எபிநேசர்

செல்வன். பிரவீன் ஐசக்துரை
சகோ. வேலு ராமர்
சகோதரி. கீதா சகாய மேரி

சகோதரி. நீலாவதி ஆசீர்வாதம்

சகோ. இம்மானுவேல் ஸ்டீபன்
செல்வி.கரன் பெபிட் செல்பின்
சகோ. டேனியல் குமார்

சகோதரி. மெர்லின் ஜோன்ஸ்

சகோ. ஜெயசேகர்

செல்வன். ரிச்சர்ட் வேதானந்தம்
செல்வி. ஜாய் ஷக்கினா ஜான் போஸ்கோ

சகோ. ஜெயபிரகாஷ்

சகோ. நவீண்குமார்

செல்வி. ஹெப்சிபா பியூலா தாமஸ்

சகோ. ஜாண்சன்

சகோதரி. பிரிஸ்சில்லா ஆமோஸ்

செல்வன். அருண்பிரகாஷ்

உன்னை இந்த ஜனத்துக்கு எதிரே அரணான வெண்கல அலங்கமாக்குவேன்; (எரே.15:20)

## இந்த மாதம் திருமண நாளை சிறப்பிக்கிறவர்கள்

திருமதி ரூ திரு. ராபின் ராஜ் ஹெலன்ஷீஜா
திருமதி ரூ திரு. ஜெகன் தேவ கிருபை
திருமதி & திரு. ஆஸ்டின் மேகலா
திருமதி & திரு. அந்தோனி சாமி விஜயா
திருமதி & திரு. குண சேகரன் தமிழ் செல்வி
திருமதி ரூ திரு. ராஜவேல் ஜெகதாம்பாள்

# 2020 பிப்ரவரி மாத நிகழ்ச்சி நிரல்

## ஞாயிறு ஆராதனை நேரம் மாலை 5:00 முதல் 6:15 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 02/02/2020 | சகோ. சுகுமார் | சகோ. ஜசக்துரை |
| 9/02/2020 | சகோ. ஆரோக்கியராஜ் | சகோ. ஜெகநாதன் |
| 16/02/2020 | சகோ. பிராங்ளின் | சகோ. கிறிஸ்டோபர் தேவராஜ் |
| 23/02/2020 | சகோ. கிருஸ்டோபர். M | சகோ. பிரசாத் சுந்தரம் |

## வெள்ளி ஆராதனை நேரம் மாலை 4:00 முதல் 5:45 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 07/02/2020 | Paster . S. Bkthileham<br>(Aruma Good news Mission Chennai) | |
| 14/02/2020 | சகோ. ரவிஜான் பீட்டர் | சகோ.ஆரோக்கியதாஸ் |
| 21/02/2020 | உபவாச திருவிருந்து ஆராதனை | |
| 28/02/2020 | சகோ. ஜெயபிரகாஷ் | சகோ. ஆசீர்வாதம் |

13/02/2020 அன்று முழு இரவு ஜெபம் (இடம் பரிசுத்த பவுல் ஆலயம் )–
நேரம் இரவு 10 மணி முதல் அதிகாலை 2:00 மணிவரை

26/02/2020– சாம்பல் புதன் ஆரதாணை
இடம் : பாஹீலில் உள்ள ஜெபவீடு – நேரம் மாலை 6:30 முதல் இரவு 8:30

24/02/2020 அன்று மாதாந்திர பெண்கள் ஐக்கிய கூடுகை
இடம் : பாஹீலில் உள்ள ஜெபவீடு – நேரம் மாலை 6:30 முதல் இரவு 8:30
(வேத வினா பகுதி ரூத் புத்தகத்தில் இருந்து)
(பொருப்பெடுத்து நடத்துபவர் சகோதரி அல்ஜியா தாமஸ் அவ்கள் குடும்பம்)

28/02/2020 அன்று மாதாந்திர வாலிபர் ஐக்கிய கூடுகை
இடம் : பாஹீலில் உள்ள ஜெபவீடு – நேரம் மாலை 6:30 முதல் இரவு 8:30
(வேத வினா பகுதி பிரசங்கி மற்றும் உன்னதபாட்டு புத்தகத்தில் இருந்து)

# 2020 பிப்ரவரி மாதத்திற்கான வேத வினா!

## கீழ் கண்ட கேள்விகளுக்கு சரியான பதிலை வசனம் மற்றும் அதிகாரத்துடன் குறிப்பிடவேண்டும்

விடைகளை வருகின்ற
**15-02-2020க்குள்**
சபையின் செயலாளரிடமோ அல்லது செய்திமலர் பொருப்பாளரிடமோ நேரிலோ அல்லது வாட்ஸ்ஆப்ஸிலோ (whatsApps # 66015503 - with Name ) அனுப்பும்படி (கொடுக்கும்படி) கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.
விடைகளை "**ஆதியாகமம்**" 4,5,6,7,8,9,10 புத்தகத்தில் தேடி கண்டுபிடிக்கவும்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | | |
| | | | | | 4 |
| | | | | | |
| | | | | | |
| 5 | | | | | |
| | | | | 6 | |
| | | | | | |
| | | | 7 | | |
| | | 8 | | | |
| | | | | | |
| 9 | | | | | 10 |
| | 11 | | | | |
| | | | | | 12 |
| | | 13 | | | |

### மேலிருந்து கீழ்

1 பத்தாம் மாதம் முதல் தேதியிலே காணப்பட்டது(9)
2. நோவாவுக்கோ, கிருபை கிடைத்தது கர்த்தருடைய– ?(5)
3.மிஸ்ராயீமின் மகன் (4)
4. நோவா 600 வயதாகியிருந்த பொழுது பூமியின் மேல் உண்டானது ?(8)
6.ஏனோக்கு எதின் பெயர் ? (5)
7. காமுடைய குமாரன்?(3)
9. மிகவும் எரிச்சல் உண்டாகி வேறுபட்டது எது ?(4)
10. தேவன் விருத்தியாக்குவார் என்று நோவா கூறியது யாரை?(4)

### கீழிருந்து மேல்.

8 .ஆனாலும் ———— என் உடன் படிக்கையை ஏற்படுத்துவேன் ? (5)
11. பேழை உண்டாக்கப்பட்ட மரம்?(4)

### வலமிருந்து இடம்.

1. யாரேத்தின் தகப்பன் ?(6)
5. சிநெயார் தேசத்திலுள்ள ஒரு இடம்? (3)
8. பூமியுள்ள நாளளவும் ஒழியாத ஒன்று? (4)
9. பேழையின் உயரம் எத்தனை முழம் (4)
13. கர்த்தருக்கு முன்பாக பலத்த வேட்டைகாரனாயிருந்தவன் யார்? (4)

### இடமிருந்து வலம்.

12.அரராத் என்னும் மலைகளின் மேல் தங்கினது எது? (2)

## – – –தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; – –

மத்தேயு 7:7

# மிஷனரி செய்திகள்

## பாஸ்டர் மாற்கு டேனியல் பன்டேன் (1923-1989)

டேனியல் மாற்கு பன்டேன் கனடாவில் வின்னிப்பெக் என்ற இடத்தில் 1923 ஆம் ஆண்டு ஜனவரி 26-ம் தேதி பிறந்தார். அவர் தகப்பனார் ஒரு பிரசங்கியார். பிரசங்கிப்பதை கேட்டு மகிழ்ந்த மாற்கு, தானும் ஒரு பிரசங்கியாராக வேண்டுமென்று விருப்பங்கொண்டார். தன்னுடைய தாயின் தெய்வ பக்தி அவரை அதிகம் கவர்ந்தது. ஏழு வயது இளைஞனாக இருக்கும்போதே மாற்கு தன்னை தேவனுக்கென்று அர்ப்பணித்தார். ஊழியம் செய்த மிஷனெரிகளின் வரலாற்றைக் கேட்டபோதெல்லாம் அகமகிழ்ந்தார்.

ஆப்பிரிக்கா, லைபீரியா போன்ற நாடுகளுக்குச் சென்று ஊழியம் செய்த கென்ஸ்டிவன்சனின் வாழ்க்கை சரிதை, அவரின் ஏழாம் வயதிலேயே அவரை அதிகம் கவர்ந்தது. மாற்கு தனது 16-வது வயதில் டொரோன்டோவிலுள்ள கடை ஒன்றில் வேலையில் சேர்ந்தார். அங்கு சேர்ந்த சில வாரங்களில் பணம் வசூலிக்கும் இடத்தில் பணியமர்த்தப்பட்டார். நாணயமான கடின உழைப்பைக் கண்ட அவருடைய மேலாளரின் பாராட்டுதலைப் பெற்றார்.

ஒருநாள் இரவு படுக்கைக்கு செல்லும் சமயம் ஆண்டவர் தன்னோடு பேசுவதை தெளிவாக அவர் உணர்ந்தார். உடனே முழங்காலில் நின்று ஆண்டவரே இந்த உலகக் காரியங்களை இச்சிக்கும் தன்மையை என்னிலிருந்து எடுத்துப் போடும். நான் உமக்கு ஊழியம் செய்ய வாக்களிக்கிறேன் என்று கூறினார். இதைத் தொடர்ந்து தன்னுடைய வேலையை ராஜினாமா செய்துவிட்டு கடவுளுடைய வேலையை செய்யலானார். அவர் பொறுப்பேற்ற திருச்சபை வாட்ரோஸ் என்ற இடத்தில் அமைந்திருந்தது. மாற்கு அத்திருச்சபைச் சபையை பொறுப்பேற்ற சமயம் அதின் அங்கத்தினர்கள் ஆறு பேர் மட்டுமே என்ற போதிலும், அந்த ஊழியத்தில் தன்னுடைய வாழ்க்கையையே மாற்றம் காணச் செய்தது. 21வது வயதில் சுவிசேஷகராகச் செல்வதற்கான அழைப்பை அவர் பெற்றார்.

1944-ஆம் வருடம் 2 அன்று ஒரு மிஷனெரியின் மகளாகிய ஹல்டாவை திருமணம் செய்து கொண்டார். 1952-ம் ஆண்டு வெளிநாட்டுக்குச் சென்று ஊழியம் செய்யவேண்டும் என்ற தன் விருப்பத்தை தன் மனைவியிடம் தெரிவித்தார். மூன்று மாதங்களே ஆயின. அதற்குள் தேவனிடதிலிருந்து புதிய அழைப்பு வந்தது. இது பற்றி மாற்கு கூறுகிறார். "இந்த உள் அழைப்பை நான் வேறு யாரிடமும் கூறவில்லை ஆனாலும் மிஷனெரி தலைமையகத்திலிருந்து உடனே கொல்கத்தாவுக்கு போகும்படி பணிக்கப்பட்டோம்." மாற்குவும், மனைவியும், மனைவியின் தாயாருமாக ஆகஸ்ட் 1954-ம் ஆண்டு இந்தியா வந்து சேர்ந்தனர்.

ஆரம்ப நாளிலிருந்து பலவித கஷ்டங்கள், சோதனைகள், பண நெருக்கடிகள், தனிமை, என்று ஏகப்பட்ட நெருக்கங்கள் இத்தனை இடர்பாடுகளும், தொல்லைகளும் அவர்களின் ஊழிய மகிமையின் மத்தியில் ஒன்றுமில்லாமல் போய்விட்டன. தங்களின் ஊழியம் அநேக ஏழை மக்களையும், சுகவீனரையும், பசியுற்றோரையும் தொட்டு, அவர்களின் வாழ்க்கையைப் பிரகாசமடைய செய்கிறது என்ற உண்மை அவர்களை மெய்சிலிர்க்க செய்தது.

1964–ம் ஆண்டு மாற்குவின் குடும்பத்தினர் 230 மாணவர்களுடன் அசெம்பிளீஸ் ஆப் காட் பள்ளிக் கூடத்தை கல்கத்தாவில் நிறுவினர். இந்த பள்ளிக்கூடம் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமாக வளர்ந்தது. இன்று பாலர் வகுப்பு முதல் இளைநிலை கல்லூரி வரையில் ஆலமரம் போல் பொலிவுடன் விளங்குகிறது. இப்படி சிறிய அளவில் ஆரம்பித்து தற்போது 10000 மாணவர்கள் கல்வி கற்கும் 20 பள்ளிகளாக மிஷன் ஆப் மெர்ஸி வளர்ந்திருக்கிறது.

1984–ம் ஆண்டு மேற்கு வங்காளத்தில் 15 மில்லியன் மக்கள் பெருவெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பொழுது ஐக்கிய நாட்டுச் சபையுடன் சேர்ந்து தங்கள் வீடுகளை இழந்து தவித்த மக்களுக்கு மாற்குவும் அவரது குழுவினரும் உதவி செய்தனர். ஆதரவற்ற சிறுவர்களுக்கும், வறுமையின் நிமித்தம், பள்ளிக்கூட படிப்பை கைவிட்ட சிறார்களுக்கும் உதவும் படியாக சிறுவர் இல்லம் ஒன்றை மாற்கு பண்டேன் தொடங்கினார். 1965–ம் ஆண்டு மாணவர்களுகளுக்கு உணவு அளிக்கும் திட்டத்தையும் ஆரம்பித்தார். ஆயிரக்கணக்கான மாணவர்களுக்கு இத்திட்டம் பயன் அளித்தது.

மருத்துவ ஊழியம் ஆரம்பிக்க வேண்டும் என்ற பண்டேன் தம்பதியினரின் கனவு 1977–ல் கைகூடியது. அரசாங்கத்திடமிருந்து இதற்கென்று ஒரு நிலம் ஆச்சரியமாக இவர்களுக்கு வழங்கப்பட்டது. அதுவரையில் 16 படுக்கைகள் கொண்ட சிறிய மருத்துவமனையை ராய்டு நடத்தி வந்தார். தேவனுக்கென்று பல்வேறு ஊழியங்களை 34 ஆண்டுகள் சிறப்பாக நிறைவேற்றிய பண்டேன் ஜீன் மாதம் 1989 அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்தார். அவருடைய கல்லறையில் பர்மா புகழ் ஜட்சன் எழுதிய ஜெபம் பதிக்கப்பட்டிருக்கிறது.

அது பின்வருமாறு ஒரே ஒரு வேண்டுதல் ஒரே ஒரு வாஞ்சை, என் கடமையை முடித்து இந்திய மண்ணிலுள்ள கல்லறையில் துயில்வது. பண்டேன் மரித்துவிட்டார் ஆனால் அவருடைய ஊழியம் தொடர்கிறது. மாற்கு மரித்தாலும் ஆயிரமாயிரம் பேர் பயன் பெறும் விதமாய் அவர் பணி இன்றும் தொடர்கிறது. நீங்கள் இப்படிப்பட்ட பணிக்குத் தயாரா?

அன்பு சகோதரன்

S.சுகுமாரன்

தேவன் அருளிய சொல்லி முடியாத ஈவுக்காக ஸ்தோத்திரம்.

ஆண்டவரும் அருமை இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்கள் யாவருக்கும் புதிய வருட நல் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

கடந்த நாட்களில் தேவன் நம்முடைய வாழ்க்கையில் அநேக எதிர்பார்த்த எதிர்பாராத நன்மைகளை செய்தபடியால் அவருக்கு ஸ்தோத்திரம் செலுத்துவோம்.

தேவன் நம்முடைய வாழ்வில் நன்மைகளை செய்ய நாம் பாத்திரவான்களாக காணப்படுகிறோமா? நான் அவருக்கு பிரியமில்லாமல் இருந்தாலும் தேவன் நம்மை ஆசீர்வதிக்கிறாரே அவருடைய அன்பு எவ்வளவு பெரியது என்பதை என்றைக்காவது நீங்கள் சிந்தித்து பார்த்ததுண்டா?

அப்போஸ்தலனாகிய பவுல் எபேசியருக்கு எழுதும்போது " நாம் வேண்டிக்கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே அதிகமாய் கிரியை செய்கிற வல்லமையின்படியே நமக்கு செய்ய வல்லவராகிய அவருக்கு மகிமையுண்டாவதாக" (எபே-3:20) என்று சொல்லுகிறார்.

வேண்டிக்கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் செய்கிற தேவன் நம்மோடிருந்து நம்மை பெரிதும் ஆசீர்வதித்து நடத்துகிறார். வருடந்தோறும் வாக்குத்தத்தங்களை வாங்கி அந்த வருடத்தில் அந்த வாக்குத் தத்தம் ஏன் நம்முடைய வாழ்வில் நிறைவேறவில்லை என்பதை சிந்தித்து பார்ப்பது கிடையாது.

அனுதினமும் நம்முடைய அன்றாட ஜெபத்தில் தேவைகளை அடுக்கிக்கொண்டிருக்கிறோம். ஆனால் ஆவிக்குரிய வாழ்க்கையில் ஆண்டவரோடு நாம் கொண்டுள்ள உறவு எவ்வளவு நெருக்கமாக இருக்கிறது என்பதை அநேகர் சிந்திப்பது கிடையாது.

ஆலயத்திற்கு செல்கிறோம் ஏன்? செல்கிறோம் என்று யாரேனும் கேட்டால் அப்பொழுதுதான் ஆண்டவர் நம்மை ஆசீர்வதிப்பார் என்று சொல்லி உலக ஆசைக்காக ஆண்டவரை தேடுகிறோம்.

2019- ஆம் ஆண்டு வரை ஜெபித்தோம் தனியாக ஆண்டவரோடு பேசினோம் ஆனால் அவர் குரல் கேட்கப்படாமல் தனியாக பைத்திரக்காரனை போல ஜெபத்தில் கேட்கிறோம்.

2020-ஆம் ஆண்டில் முதற் பகுதியில் இருக்கிறோம். நாம் ஒரு தீர்மானம் கொள்ளலாமா? இந்த வருடம் முடிவதற்குள் உம்முடைய குரலை கேட்க வேண்டும்

உம்மோட பேச வேண்டும். ஆவிக்குரிய வாழ்க்கையில் நன்றாக வேரூன்ற வேண்டும் என்று கேட்கும் போது ஆண்டவர் நம்மை போதித்து நடத்துவார்.

இந்த 2020–ஆம் ஆண்டில் கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர சகோதரியே, கர்த்தர் உங்களிடத்தில் எதிர்பார்க்கும் ஒரே காரியம் என் மகனே உன் இருதயத்தை எனக்குத் தா. உன் கண்கள் என் வழிகளை நோக்குவதாக என்பது. (நீதி–23:26)

கர்த்தர் நம்மிடம் எதிர்பார்ப்பது பொன்னையோ பொருளையோ அல்ல. உன் இருதயத்தை அவருக்கு கொடு. உலகப்பிரகாரமான காரியங்களில் உங்கள் இருதயம் கறைப்பட்டு காணப்பட்டாலும் தகப்பனே என் இருதயத்தை உம்மிடத்தில் கொடுக்கிறேன் அதை பரிசுத்தமாக்கும். உம்முடைய வழிகளில் நான் செல்லவேண்டும் என கேட்கும்பொழுது " நான் உனக்கு போதித்து நடக்க வேண்டிய வழியைக் காட்டுவேன் உன் மேல் என் கண்ணை வைத்து உனக்கு ஆலோசனை சொல்லுகிறவறாக கர்த்தர் நடத்துவார்.

உன் செய்கைகளை கர்த்தருக்கு ஒப்புவி அப்பொழுது உன் யோசனைகள் உறுதிபடும் (நீதி–16:3)

எதிர் கால வாழ்க்கையைக் குறித்து பயமா? யார் என்னை உயர்த்தக்கூடும் என்ற அச்சமா? சகோதரனே சகோதரியே சிந்தித்துப்பார்.

நாம் பாவம் செய்தபோதும் நம்முடைய தேவைகளை சந்தித்து இருக்கிறாரே! அப்படியானால் அவருக்கு பிரியமாய் நடக்கும்போது போட்டி பொறாமை புறங்கூறுதல் போன்றவைகளை வெறுத்து கர்த்தருக்கு பிரியமாய் நடக்கும்போது தடைப்பட்ட தடைப்படுகிற ஆசீர்வாதங்கள் நம்மேல் வந்து சேரும்.

சிம்சோன் தேவனை விட்டு வழி விலகி போன போதும் அவன் கூப்பிட்ட நேரமெல்லாம் செவிகொடுத்தாரே அவருடைய அன்பை நினைத்து பார்க்க வேண்டும். ஒரு வேளை நான் பாவியாகவேதான் வாழ்வேன் என்று உங்கள் வாழ்க்கையில் நீங்கள் குறிக்கும்போது பிசாசானவன் உங்களை மேற்கொள்ளுவான். சிம்சோன் கண்கள் பறிக்கப்பட்டது போல உங்கள் ஆசீர்வாதமும் பிசாசானவனால் பறிக்கப்படலாம். எனவே தேவன் செய்த நன்மைகளை நினைத்து நன்றியறிதல் உள்ளத்தோடு அவருக்கு ஸ்தோத்திரம் செலுத்துவோம்.

தேவன் நம்மை நடத்துவாராக

வாலிபம் இயேசுவுக்கே.

# மார்டின் லூத்தர்

மார்டின் லூத்தர் சமய புரட்சி செய்த நாட்களில் பாவ மன்னிப்பு சீட்டை குறித்து தன் எதிர்ப்பை பல விதத்தில் காட்டினார். இதற்கு சில படித்தவர்களை தனக்கு உதவி செய்யும்படி அவர்களோடு தனக்கு நாட்டை உண்டாக்க கொண்டார். மார்டின் லூத்தர் தாக்கத்தை ஏற்றுக் கொண்டு இவருக்கு ஆநேகர் ஆதரவு காட்டினர். அம்மக்களில் பிரட்ரிக் பிலிப்பு என்பவரும் ஒருவர்.

பிரட்ரிக் பிலிப்பு என்பவர் பூரணமான திருப் பொருட்களை சேர்த்து வைத்திருந்தார். 1516ல் சகல பரிசுத்தவான்கள் திருநாளில் சபை மக்கள் அனைவரையும் இவைகளை தரிசிக்க உதவி செய்தார். 1509ல் இவரிடத்தில் 1.ஜெரோம் என்பவரின் ஒரு பல் 2.பரி. அகஸ்டியன் என்பவரின் 4 எலும்புகள் 3. கன்னி மரியாளின் 432 முடிகள் 4. அவரது மேலாடையின் 3 துண்டுகள. 5. அரைகச்சையின் 4 துண்டுகள். 6. இயேசுவின் இரத்தகரைகள் படிந்த முக்காட்டின் 7துண்டுகள்.7. அவர் பிறந்த போது சுற்றப்பட்டிருந்து கற்தை துணிகளில் ஒன்று. 8 பசு கொட்டிலின் 13 துண்டுகள். 9.ஒரு வைக்கோள் சுருள் 10 சாஸ்த்திரிகளால் வைக்கப்பட்ட பொன்னின் ஒரு துண்டு. 11 வெள்ளை போலத்தில் 3துண்டு. 12 தாடை மயிலின்ஒரு பிடி 13. கரத்தில் கடாவப்பட்ட ஆணிகளில் ஒன்று 14 . இறுதி பந்தியில் பரிமாறப்பட்ட அப்பத்தில் ஒரு துண்டு. 15 அவர் பரம் ஏறிய போது சுவர் காலூன்றி நின்ற கல்லில் ஒன்று. 16. இவற்றோடு மேடாசேக்கு காணப்பட்ட எரிகிற செடியின்கிளை ஒன்றும் இருந்தது. இவைகளை வைத்து மேற்கூறிய தினத்தில் கட்டனம் செலுத்தி பார்க்கும்படி செய்தார். இதனால் பிரட்ரிக் பிலிப்பு என்பவருக்கு ஏகப்பட்ட வசூலானது. இது அவர் அரண்மனை கட்டுவதற்கும் நமத்தி வந்த பல்கலை கழகத்துக்கு செலவுக்கு பெரிதும் உதவியா இருந்தது. இதனை லூத்தர் வெளியரங்கமாக கண்டிக்க ஆரம்பித்தார். இதற்கு பெய்ண்ட்டன் என்ற ஆசிரியர் ஆதரித்து அதற்கு சிரியான காரணத்தை விளக்கினார். ஆயினும் பாவமன்னிப்பின் சீட்டு விற்றதால் ஏமாற்றம் அடைந்த பக்தர்கள் இதையும் கட்டணம் செலுத்தி பார்ப்பதால் இவற்றையும் விக்கிரகமாக மாற்றி வணக்கத்திற்குறிய பொருட்களாக்கி விட கூடாதென்று எச்சரிப்பு செய்தார்.

என்றாலும் தற்போதைய ரோமன் காத்லிக் சபையரால் இப்பொருட்கள் பரிசுத்த பொருட்களாக என்னப்பட்டு வணக்கத்திற்குறியதாக இருப்பது நமக்கு வருத்தத்தையே தருகிறது. லூத்தரின் கொள்கைகளை ஏற்று கொண்டவர்கள் புரட்சியாளர்கள்(அ) புராட்டஸ்டண்ட்ஸ் என்று அழைக்கபட்டார்கள். அவர்களுக்குள் புரட்சி செய்து விக்கிரக வணக்கத்தை தவிர்க்கும் புரட்டஸ்டண்ட்ஸ்கள் எழும்பினால்தான் மார்கம் உறுப்படியாகும். மக்களும் பரலோகம் செல்லும் பாதையை அறிவர். கர்த்தர்தான் கண்களை திறக்க வேண்டும்

# சத்துருக்களை சிநேகியுங்கள்

இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் நான் வாழ்த்துக்களை தெரிவித்து கொள்கிறேன். மீண்டும் ஒரு விசை இச்செய்திமலர் வாய்லாக சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். நாம் நம் சத்ருக்களை நாம் சிநேகிப்பதில் நாம்தான் முந்திக்கொள்ள வேண்டும்

## 1.சிநேகத்தின் சிறப்பு( மத்தேயு 26:48 to 50)

சிநேகத்தின் சிகரமாய் விளங்குபவர் இவ்வுலகிலும், பரலோகத்திலும் நம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துமட்டுமே,அவருடைய சிநேகத்திற்கு ஈடு இணை என்று ஒன்றுமில்லை, யூதாஸ் –12 சீடருடன் இவனும் ஒருவாராக இயேசுவோடு மூன்றறை ஆண்டுகள் சுற்றிதிரிந்தார், அவர் செய்த அற்புதங்கள், அதிசயங்களை தன் கண்ணார கண்டும், அவரை 30 வெள்ளி காசிற்காக காட்டி கொடுக்கின்றான் ஆனால் இயேசு, அவனை சிநேகிதனே, என்றழைக்கின்றார். எத்தனை பெரிய சிநேகம் இது, சிநேகத்தின் சிறப்பில் மிக உயர்ந்தவர் நம் இயேசு மட்டும்தானா? இல்லை சகோதர, சகோதரிகளே, நாமும் கூட அவரை போல சிறந்து விளங்க முடியும், எப்பொழுது? நம் சத்துருக்களையும், நாம் சிநேகிக்கும் போது மட்டும்தான்? முதலாவது நம் வாழ்வில் சத்துரு – பிசாசானவன் (யோவான் 10:10ன்படி)திருடனாகிய பிசாசு, நம்மை அழிக்கவும்,கொல்லவும், வருகின்றான், வேத வசனத்தினாலும், ஜெபத்தினாலுமே, அவனை நாம் மேற்கொள்ள வேண்டும். அதற்கு நம் இயேசுவானவர் மட்டுமே உதவ முடியும் மனிதரை நம்பி நாம் ஏமாந்த காலத்தை விட்டு விட்டு, கர்த்தரை மட்டும் நாம் பற்றிகொள்வோம்.

## 2). சிநேகத்தின் மூலம் கிடைக்கும் நன்மைகள்:–

நம் தனிபட்ட வாழ்விலும், குடும்ப வாழ்விலும், வேலையிலும், ஊழியத்தின் பாதைகளிலும், தீமையை வெறுத்து நாம் பிறருக்கு நன்மை செய்வோமென்றால், அதனால் நமக்கு கிடைக்கும் பலன் இம்மையிலும் மறுமையிலும், மிகுதியாக இருக்கும்.

நம் சொந்த வீட்டாரே, நமக்கு சத்துருவாய் இருக்கலாம், இருளுக்கும், ஒளிக்கும், சம்மந்தம் ஏது, என்று வேதம் கூறுகிறது, நாம் வெளிச்சத்தை கொடுக்கிறவர்களாய், இருந்தால் மட்டுமே, நாம் பிறரை சிநேகிக்க முடியும். அதனால் உண்டாகும் ஆசீர்வாதங்கள், நமக்கு மிகுதியாய் இருக்கும்( நீதி 8:18) தீமையை வெறுப்பதே கர்த்தருக்கு பயப்படுகிற பயம்,நாம் கர்த்தருக்கு பயந்திருந்தால், நம் சத்துருக்களையும் சிநேகிக்க தயங்க மாட்டோம், அவருடைய அன்பினாலே மட்டும்தான், நாமும் பிறரை சிநேகிக்க முடியும். மற்றவர்களை குறித்து, நமக்கு எந்த வித கசப்பும், மனதில் வேண்டாம், அவனவன் செய்கைகளுக்கு தக்க பலன் தேவன் வருகையில் அவரோடே கூட வரும் அதை தேவன் பார்த்துக் கொள்வார்

**3. ஆன்மிக சிநேகம்:–** உலகபிரகாரமான சிநேகம்மட்டுமல்லாமல், நாம் ஆன்மீக சிநேகத்தினாலும் நிலைத்து இருக்க வேண்டும் அத்தகைய சிநேகம் அதிகலையில் எழுந்து தேவனோடு உறவாடுவதின் மூலம் நமக்கும் கிடைக்கும். தானியலை போல அந்தி சந்தி நேரத்திலும், நம் ஜெபத்தின் மூலமாக , ஆன்மீக சிநேகத்தில் நாம் அனுதினம் வளர வேண்டும், நாம் சத்துருக்களை சிநேகிப்பது மட்டும் அல்லாமல் ஆன்மீக வாழ்விலும் சிறந்து விளங்க தேவனுடைய அன்பும், சிறந்த செயல்களும், பெற்று நம் வாழ்வில் மேன்மேலும் ஆசீர்வாதத்தைப் பெறுவோமாக!

தேவன்தாமே நம்மை ஆசீர்வதிப்பாராக. !

கிறிஸ்துவுக்குள் சகோதரி : *Beula paul Jaganathan*

# கடந்த மாத நிகழ்வுகளில் சில உங்கள் பார்வைக்கு



















உங்களுக்கு ஊழியம் செய்ய எங்களுக்காக ஜெபியுங்கள்

செயற்குழு உறுப்பினர்கள்

சபை ஊழியர் – சகோ. ஸ்டாலின்

66021072

செயலாளர் – சகோ. ஆரோக்கியதாஸ்

99870126

பொருளாளர்– சகோ. எபநேசர்

23922058 - 50203472

பெண்கள் ஐக்கிய தலைவி

சகோதரி . பியூலா ஜெகநாதன்

60797360

வாலிப ஐக்கிய தலைவர் –

சகோ. ஆரோக்கியராஜ்

66159784

Church Website Address – ahmaditamilcongregation.org

Church ‘E’ mail ID – ahmaditamil.kw@hotmail.com

Church Postel Address

Your name – Po. Box no 46795. 64018, fahaheel ,Kuwait

தங்களது ஜெப விண்ணப்பங்கள்
எதுவாக இருந்தாலும்
எங்களுக்கு தெரிவிக்கவும்
உங்களுக்காக ஜெபிக்க
ஒரு குழு ஆயத்தமாய் இருக்கிறது.

Private Circulation only